பக்கங்கள்:-16

காலை முரசு

## ஜனாதிபதி இன்று வடக்குக்கு விஜயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல் வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக இன்று 06



முழுக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 11 | வெள்ளிக்கிழமை | 24.05.2024 | அதிர்வு 297

# மோ. சைக்கிளை மோதித் தள்ளியது ரயில்! மூன்று இளைஞர்கள் பரிதாப உயிரிழப்பு!!



காலியில் மோட்டார் சைக்கிளுடன் ரயில் மோதியதில் மூன்று இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து நேற்று மாலை காலி – பூஸா, பிந்தலிய சந்தியில் உள்ள பாதுகாப்புக் கடவையில் இடம்பெற்றுள்ளது.

ரயில் கடவையின் பாதுகாப்பற்ற சமிக்ஞை காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் உயிரிழந்த மூன்று இளைஞர்களும் 17 முதல் 19 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் 06

# பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்துக்கு செப்டெம்பர் அமர்வில் மீளவும் ஆணை

## ஐ.நாவிடம் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து



இலங்கையின் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்துக்கான ஆணையைச் செப்டெம்பர் மாத அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை புதுப்பிப்பது மிகவும் அவசியம் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது கொல்லப்பட்டவர்கள், காணாமல்போனவர்களை நினைவுகூர்ந்தவர்களை இலங்கை அரச அதிகாரிகள் அச்சுறுத்தியதுடன் தடுத்தும் வைத்தனர் என்றும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது. 07

# சீரற்ற காலநிலையால நேற்றும் மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் இருவர் பரிதாபப் பலி

## ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்



தொடரும் சீரற்ற காலநிலையால் புத்தளத்திலும், நுவரெலியாவிலும் நேற்று மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

புத்தளம், முந்தல் பகுதியில் வில்பொத்தயிலிருந்து சிலாபம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொரு யுவதி படுகாயமடைந்துள்ளார் என்று முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயது யுவதியே நேற்று உயிரிழந்துள்ளார். 06

### அதிகாலை வேளை உறங்கிக்கொண்டிருந்த

# தந்தையும், மகனும் சடலங்களாக மீட்பு!

## கம்பளையில் சோகம்



வெசாக் தினத்தில் தன்சல் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு நித்திரைக்குச் சென்ற தந்தையும், மகனும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கம்பளை, புப்புரஸ்ஸ நகரில் 07




நேற்று என் பத்தியில் இராணுவ ஆள்குறைப்புப் பற்றி ஒரு தகவலை வெளியிட்டு இருந்தேன்.

யுத்தத்தின் உச்சத்தில் 2 லட்சத்து ஐயாயிரம் பேரைக் கொண்டிருந்த இலங்கை இராணுவத்தினரின் எண்ணிக்கை யுத்தம் முடிந்த பின்னர் உயர்ந்து கொண்டே சென்றது என்று குறிப்பிட்டேன்.

2020 – 2021 பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து படைக் குடைப்பை தொடங்கியது இராணுவம். இப்போது அதன் எண்ணிக்கை ஒரு லட்சத்து 61 ஆயிரம் என்றும் குறிப்பிட்டேன்.

இந்த இரண்டு கணக்குமே 06



# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்ந்து இழுபறியில்

நாட்டின் அந்நியச் செலாவணிக்கான அச்சாணியாகத் திகழும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயம் இழுபறி நிலையிலேயே உள்ளது.

இந்த நிலையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான புதிய அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதனிடையே, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளத்தை வழங்க மறுக்கும் பெருந்தோட்ட நிறுவனங்களின் காணி குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2024 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,350 ரூபா வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

நாளாந்த விசேட கொடுப்பனவாக 350 ரூபா வழங்கப்படவுள்ளதுடன், நாளாந்த மொத்த கொடுப்பனவாக 1700 ரூபா வழங்கப்படவுள்ளதாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக கொழுந்து கிலோ கிராம் ஒன்றுக்கு 80 ரூபா வீதம் வழங்கப்பட வேண்டுமென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.பி.ஏ.விமலவீரவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தவறான முகாமைத்துவம் காரணமாக தொழிலாளர்களின் சம்பளத்தை செலுத்தத் தவறும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கான காணி குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அத்தகைய தோட்டக் கம்பனிகளுடனான காணிக்குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்யக்கூடிய வகையில் சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான படிமுறைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை, தொழில் அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியை நடைமுறைப்படுத்த முடியாது என எவராலும் கூற முடியாது என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற இரண்டு சுற்றுப் பேச்சுகளிலும் முதலாளிமார் சம்மேளனம் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில், ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாவை நிர்ணயித்து தொழில் ஆணையாளரால் வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்த சம்பள அதிகரிப்பு நடைமுறைச் சாத்தியமற்றது என தெரிவித்து பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் நீதிமன்றத்தை நாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டது

காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரண முன்வைத்த யோசனைக்கு அமைய, அமைச்சரவையினால் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் வைத்தியசாலையின் படுக்கை வசதியை 2,858 ஆக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையானது கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு பின்னர் இரண்டாவது தேசிய வைத்தியசாலையாக அறிவிக்கப்பட்டுள்ளது.



# பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்

## உதய கம்மன்பில கூறுகின்றார்



"பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களாணையுடன் மீண்டும் ஆட்சியமைத்தால் பண்டாரநாயக்க குடும்பத்துக்கு ஏற்பட்ட அரசியல் கதியே ராஜபக்ஷக்களுக்கும் ஏற்படும். பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை எதிர்பார்த்துள்ளோம்."

– இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் முதலில் நடத்தப்படும் என ஜனாதிபதி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தினால் அது ஜனாதிபதிக்கும், நாட்டுக்கும் பாதகமாக அமையும்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறு பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தொடர்ந்து வலியுறுத்திய போது 113 உறுப்பினர்களின் ஆதரவை கையெழுத்துக்கள் ஊடாக உறுதிப்படுத்திக் கொண்டு வாருங்கள், நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு 113 உறுப்பினர்களின் ஆதரவை பெறுவதற்கு பஸில் ராஜபக்ஷ எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி பக்கம். ஆகவே அந்த கட்சியின் தலைவர் யார் என்பது கேள்விக் குறியாக உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுவேட்பாளராக களமிறக்குமாறு பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ராஜபக்ஷக்களிடம் வலியுறுத்தியுள்ளார்கள். பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களாணையுடன் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பண்டாரநாயக்க குடும்பத்துக்கு ஏற்பட்ட அரசியல் நிலைமை தமக்கும் ஏற்படுமோ என ராஜபக்ஷக்கள் அச்சமடைகிறார்கள்.

நாட்டு மக்கள் தம் பக்கம் என்று நினைத்துக் கொண்டுள்ள பொதுஜன பெரமுனவுக்கு இந்த ஆண்டு இடம்பெறவுள்ள தேர்தல் தகுந்த பாடத்தைக் கற்பிக்கும். அவர்களின் வேட்பாளர் யார் என்பதை நாங்களும் எதிர்பார்த்துள்ளோம்."– என்றார்.

# கொழும்பு – கண்டி பிரதான வீதியில் அனர்த்தம் ஏற்படுவதற்குச் சாத்தியம்

சீரற்ற காலநிலை காரணமாக கொழும்பு – கண்டி பிரதான வீதியின் கடுகண்ணாவை பகுதியில் கற்பாறைகள் சரிந்து விழும் மற்றும் மரங்கள் முறிந்து விழக்கூடிய அபாயம் காணப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால், இந்த வீதியில் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு சாரதிகளுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா – ஹங்குராங்கெத்தை ஹோப் தோட்டத்தில் 13 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

பலத்த காற்று மற்றும் மண்சரிவு காரணமாக இந்தத் தோட்டத்தில் உள்ள நெடுங்குடியிருப்பில் வசித்தவர்களே இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் ஆலயம் ஒன்றிலும், உறவினர்களின் வீடுகளிலும் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இ.போ.ச. பஸ் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் இரண்டு பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் மீது மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் இருவர் காயங்களுக்குள்ளாகி கினிகத்தேன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் 1.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டனில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் மீது ஹட்டன் கொழும்பு பிரதான வீதியின் தியகல பகுதியில் வைத்து குறித்த மரம் வீழ்ந்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பிரதான வீதிகளில் போக்குவரத்தை மேற்கொள்ளும் சாரதிகள் மற்றும் பொதுமக்கள் அவதானத்துடன் பயணிக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.





# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு எனும் சந்தேகத்தில் கைதான 4 இலங்கையர்களுக்கு குற்றச்செயல்களுடன் தொடர்பு

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கையர்களும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என குஜராத் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நான்கு இலங்கையர்களும் கடந்த 20 ஆம் திகதி இந்தியாவின் அஹமதாபாத் விமான நிலையத்தில் குஜராத் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இதில் மொஹம்மட் நுஸ்ரத் 38 தடவைகளும் மொஹம்மட் நஃப்ரான் நாற்பது தடவைகளும் இந்தியா சென்று வந்துள்ளார் என்பது வெளிக்கொணரப்பட்டுள்ளது.

மொஹமட் நஃப்ரான் இலங்கையில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவின் தலைவரான பொட்ட நவ்ஃபரின் மகனாவார்.

கைது செய்யப்பட்டுள்ள மொஹம்மட் ஃபாரிஸ் மற்றும் மொஹம்மட் ரஸ்டீன் ஆகியோர் இந்தியா சென்றுள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய தேசிய தௌஹித் ஜமாத் பயங்கரவாத குழுவின் உறுப்பினர்களே இவர்கள் என 'தி ஹிந்து' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

மொஹமட் நுஸ்ரத் இதற்கு முன்னர் தங்கக் கடத்தல் மற்றும் போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் எனக் குஜராத் மாநில பயங்கரவாத பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக நஃப்ரான் விசாரணையின் போது ஏற்றுக்கொண்டார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மொஹம்மட் ரஷ்டீனுக்கு எதிராக மூன்று போதைப்பொருள் வழக்குகள் இருக்கின்றன என குஜராத் பயங்கரவாத தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

யூதர்கள், கிறிஸ்தவர்கள், பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர்கள் மற்றும் கட்சியின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ். அமைப்பை குறிவைக்குமாறு தமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக கைது செய்யப்பட்டுள்ள நான்கு இலங்கையர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானில் ஐ.எஸ். தலைவராக செயற்படும் அபு என்பவரின் ஆலோசனைக்கு அமைய, இந்தியாவில் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்ததாகக் கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

நர்மதா கங்கைக்கு அருகிலுள்ள பகுதியொன்றில் இவர்களின் நிழற்படமும் கையடக்கத் தொலைபேசிகளும் கண்டுபிடிக்கப்பட்டதுடன், பாகிஸ்தானில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கிகளும் ரவைகளும் இதன்போது மீட்கப்பட்டிருந்தன.

இதற்கு மேலதிகமாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கொடியும் கைப்பற்றப்பட்டதுடன், தாக்குதலை நடத்திய பின்னர் அந்தக் கொடியை அங்கு ஏற்றுமாறு தமக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாகக் கைது செய்யப்பட்டுள்ள நான்கு இலங்கையர்களும் கூறியுள்ளனராம்.




# புத்தளம் பாடசாலைகளில் மரங்களை வெட்ட அனுமதி

(கற்பிட்டி எம் எச்.எம் சியாஜ்)

புத்தளம் வலய பாடசாலைகளில் முறிந்து விழும் நிலையில் உள்ள மரங்கள் மற்றும் ஆபத்தை ஏற்படுத்தும் என கருதும் மரங்களை வெட்டுவதற்கு புத்தளம் மாவட்ட செயலாளரினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிராம அதிகாரி, பிரதேச செயலாளர் ஊடாக இதனை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென மேலதிக பணம் தேவையாயின் மாவட்ட செயலாளருக்கு இது தொடர்பாக அறிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வட்டவளைக்கு அருகே போக்குவரத்து பாரிய மரம் சரிந்ததால் பாதிப்புற்றது!

ஹட்டன் – கண்டி, ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியின் வட்டவளை நகரை அண்மித்த பகுதியில் பாரிய மரம் ஒன்று சரிந்து வீழ்ந்த நிலையில் இவ்வீதியூடான போக்குவரத்திற்கு நீண்ட நேரம் தடையேற்பட்டதாகப் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுப் பகல் ஏற்பட்ட இந்த அனர்த்தம் காரணமாக இவ்வீதி மூலம் ஹட்டனில் இருந்து கினிகத்தேன வழி ஊடாக கண்டி, கொழும்பிற்குச் செல்லும் வாகனங்களும் அதேபோல் கொழும்பு, கண்டி பகுதிகளில் இருந்து ஹட்டன், நுவரெலியா மற்றும் ஏனைய பிரதேசத்திற்கு பயணிக்கும் வாகனங்களும் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் இவ்வீதியில் நீண்ட தூரத்திற்கு நீண்ட நேரமாக வாகனங்களுடன் பயணிகள் கொட்டும் மழையில் காத்திருந்தனர் எனப் பொலிஸார் நேற்றுப் பிற்பகல் தெரிவித்தனர்.

கன மழை மற்றும் கடும் காற்று வீசுவதால் உடனடியாக முறிந்த மரத்தைப் பாதையை விட்டு அகற்ற முடியவில்லை.

அதேநேரத்தில் வட்டவளை பொலிஸார், வீதி அபிவிருத்தி அதிகாரசபைப் பணியாளர்கள் மற்றும் அப்பகுதியில் உள்ள மக்களின் உதவியுடன் சரிந்த மரத்தின் பாரிய கிளைகள் மற்றும் மரத்தை அகற்றி போக்குவரத்தைச் சீர் செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

நீண்ட நேரத்திற்கு பிறகு ஒரு வழி வீதியாக திறக்க பட்டது எனப் போக்குவரத்து பொலிசார் தெரிவித்தனர்.








## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பாதுகாப்பு தரப்பின் புள்ளி விவரங்கள் தான். இடையில் இராணுவத் துருப்புகளின் எண்ணிக்கை எந்த அளவுக்கு உயர்ந்தது என்று குழப்பமான தகவல்கள் இருந்த மையால்தான் அந்த எண்ணிக்கையை நான் துல்லியமாகக் குறிப்பிடாமல் தவிர்த்தேன்.

இதை ஒட்டி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஓர் அஞ்சல் குறிப்பை அனுப்பி இருக்கின்றார்.

சில வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தினரின் எண்ணிக்கை 3 லட்சத்து 31 ஆயிரமாக இருந்தது எனத் தாம் அறிந்திருந்தார் என்றும், அதை நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையில் என தாம் வெளியிட்டார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அது சரியாகவும் இருக்கலாம். யுத்தத்தின் பின்னரும் இலங்கை இராணுவம் தனது துருப்புகளை கணக்கு வழக்கு இன்றி அதிகரித்தது என்று குறிப்பிட்டேன். அது எவ்வளவு என்பதை சரியாக உறுதிப்படுத்த முடியாமல் இருந்தமையால் அந்த எண்ணிக்கையை நான் குறிப்பிடவில்லை.

விக்னேஸ்வரன் இப்போது சொல்வது போல அந்த எண்ணிக்கை அச்சமயத்தில் இருந்திருக்கலாம். எனது தகவல் அதை மறுத்துரைக்கவில்லை.

பாதுகாப்பு தரப்புகளிடம் கேட்டால், சிவில் தொண்டர் படையினர், இராணுவ தொண்டர் படையினர் எல்லாம் இக்கணக்கில் சேர்க்கப்படவில்லை, அப்போதைய அவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால் அப்படி இருக்கும் என்று கணக்கு விடுவார்கள்.

ஆனால் இப்போதைய நிலையில் இராணுவத்தினரின் சம்பள ஒதுக்கீடு பற்றிய விடயங்கள் எல்லாம் சர்வதேச நாணய நிதியக் கண்காணிப்பு வரை செல்வதால் இலகுவாக இராணுவத்தினர் எண்ணிக்கையை பெரிய அளவில் குறைத்துப் பகிரங்கப்படுத்த முடியாத இக்கட்டு படைத்தரப்புக்கு உண்டு.

விக்னேஸ்வரன் கூறுவது போல பாதுகாப்பு செலவினம் உயர்ந்து செல்வது உண்மைதான். அது துருப்புக்களின் எண்ணிக்கை அதிகரிப்பால்தானா என்பது பரிசோதனைக்கு உரியது.

ஒரு தடவை கொழும்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராணுவத் தலைமையகத்துக்குச் சென்று பாருங்கள். உலக தரத்தில் விளங்கும் ஆறு நட்சத்திர, ஏழு நட்சத்திர ஹோட்டல்கள் கூட தோற்றுப் போய்விடும்.

இராணுவ உயர் மட்டங்களைத் தாஜா செய்து, கையில் வைத்திருப்பதற்காக அரசு தலைமைகள் இத்தகைய டாம்பீகச் செலவுகளைத்தான் பாதுகாப்பு செலவினம் என்று மக்கள் தலையில் கட்டிக்கொண்டு இருக்கின்றன.

இராணுவத் தலைமையகக் கட்டமைப்புக்கான நிதி ஒதுக்கீடு,செலவினம் குறித்து ஒரு தனி விசாரணை கமிஷன் வைத்து விசாரித்தால் கூட ஆச்சரியமான பல விடயங்கள் வெளிவரும் என்று நம்புகிறேன்.

\+ + +

நேற்று மாலை யாழ்ப்பாணம் நண்பர் ஒருவர் அழைப்பு எடுத்தார். 'ஹலோ' சொன்னதும் பாடத்தொடங்கினார்.

"கண்டா வரச் சொல்லுங்க... கர்ணனைக் கையோட கூட்டி வாருங்கள்...!"– என்று பாடத் தொடங்கினார் அவர்.

எனக்கு விளங்கவில்லை. யாரை, எங்கு கூட்டி வருவது என்று கேட்டேன்.

"அதுதான் நமது கர்ணன் ரணில் மகாராஜா யாழ் வருகின்றாரே... உங்களுக்கு அவரைத் தெரியும்தானே..!" – என்று கேட்டார். ஏதோ ஜனாதிபதி ரணிலின் யாழ் பிரதிநிதி நான்தான் என்பது போல அவர் கேள்வி இருந்தது.

"ஓம். அவரைத் தெரியும். பரிச்சயம் உண்டு. எதற்கு...?" – என்று நான் இழுத்தேன்.

"இல்லை... இல்லை... அவரிடம் ஒரே ஒரு கேள்விதான் கேட்க வேண்டும். முடியும் என்றால் நீங்களே கேட்டுப் பதில் கூறினால் போதும் என்றார்" – அவர்.

நான் பதில் சொல்லாமல் 'ஹி..ஹி..' என்று இளித்து வைத்தேன்.

"இல்லை.. அதிகாரத்துக்கு வந்ததும், மறைந்த உறவுகளை நினைவேந்தும் உரிமை எல்லோருக்கும் உள்ளது என்று தத்துவம் பேசினார். ஆனால் அவரின் பொலிஸ் இது விடயத்தில் பண்ணுகின்ற அடாவடி, அட்டகாசம் தாங்க முடியவில்லை. அதுதான் ஒருக்கா நினைவேந்தல் தொடர்பா அவரின் நிலைப்பாடு என்ன, அவரின் பொலிஸின் நிலைப்பாடு என்ன என்று கேட்டுத் தெரிய வேண்டும். யாழ்ப்பாணம் வர முதல் அதை ஒருக்கா தெளிவுபடுத்தி விட்டு அவர் வந்தால் நல்லது. உங்களால் கேட்டுச் சொல்ல முடியாவிட்டால், அவரின் இப்போதைய யாழ் முகவர் மூலமாக கேட்டுச் சொல்லுங்கள்...!" – என்றார் அவர்.

"அது யாரப்பா? அவரின் இப்போதைய யாழ் முகவர்?"– என்று அப்பாவித்தனமாக நான் கேட்டு வைத்தேன்.

"பெரிய பத்திரிகையாளர். உங்களுக்கு அது தெரியாதா? அமைச்சர் டக்ளஸ்தான் அவர்..!" என்றார் என் நண்பர்.

எனக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. 'சரி...பார்ப்போம்' என்று கூறி தொலைபேசியை கட் செய்தேன்.

இப்போது எனக்குள் ஒரு பாட்டு அடி தோன்றியது.

"கண்டா வரச் சொல்லுங்கோ... அந்த கர்ணனிடம் ஒருக்காக் கேட்டு வாருங்கள்... முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறலாமா என்று கேட்டு வாருங்கள்...!" என்று எனக்குள் நானே பாடிக் கொண்டேன்.

## ஜனாதிபதி இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வடக்கு வருகின்றார்.

3 நாட்கள் விஜயமாக வடக்கு வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் உரித்து தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உரிமங்களை வழங்கி வைக்கவுள்ளார்.

அத்தோடு வடக்கில் இளைஞர்களுடன் ஜனாதிபதி விசேட சந்திப்பொன்றிலும் கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் பயிற்சி பிரிவொன்றையும் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி வைத்தியசாலையில்பெண்கள்சுகாதாரப்பிரிவொன்றும் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் இதய நோய் பிரிவும், மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் புதிய விடுதியொன்றும் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படவுள்ளது. இவை தவிர யாழ்ப்பாணத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்விலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

இவ்வாறு 10 முக்கிய நிகழ்வுகளில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார். அது மாத்திரமின்றி வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் இந்த விஜயத்தின்போது விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளது. எவ்வாறிருப்பினும் அரசியல் ரீதியான சந்திப்புக்கள் எவையும் திட்டமிடப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

## மோ.சைச்கிளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த கடவையில் உரிய முறையில் சமிக்ஞை செயற்படவில்லை என்று நேரில் பார்த்த பொதுமக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## சீரற்ற காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இரண்டு யுவதிகள் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீதே மரம் சரிந்து வீழ்ந்துள்ளது.

பலத்த காற்றினால் மரம் இவ்வாறு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதன்போது, படுகாயமடைந்த யுவதி சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் தொடரும் சீரற்ற காலநிலை நிலை காரணமாக ராகலை – மாகுடுகலை பகுதியில் நேற்று மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று ராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் வீசிய கடும் காற்றினால் குறித்த மரம் சரிந்து விழுந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் மஸ்கெலியாவைப் பிறப்பிடமாகவும் திருமணத்தின் பின்னர் மனைவியுடன் கந்தப்பளை ஹைபோரஸ்ட் இலக்கம் ஒன்றில் வசித்து வந்தவருமான கந்தசாமி ராஜ்குமார் (வயது 38) என்ற ஒரு பிள்ளையின் தந்தை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொறுப்புக் கூறல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி முடிவடைந்த இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது பலவந்தமாகக் காணாமல்போகச் செய்யப்பட்டோர் குறித்த விவகாரத்துக்குத் தீர்வைக் காண்பதற்காக சர்வதேச விசாரணைகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மே 17ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது என்றும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின்போது தங்கள் படையினர் இழைத்த அநீதிகளை இலங்கை அரசு தொடர்ந்தும் மறுத்து வருகின்றது என்று தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பசுபிக் இயக்குநர் எலைன்பியர்சன் இதன் காரணமாக உண்மை, நீதி, இழப்பீடு போன்றவற்றை வழங்குவதற்குப் பதில் இலங்கை அரசு பாதிக்கப்பட்டவர்களையும் அவர்களின் சமூகத்தினரையும் மௌனமாக்க முயல்கின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் துஷ்பிரயோகங்கள் நிகழாமல் தடுப்பதற்கும் மேலும் சர்வதேச நடவடிக்கைகள் அவசியம் என்பது புலனாகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மே 18ஆம் திகதி நினைவேந்தல் தினத்துக்கு முன்னர் வடக்கு - கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளை இலங்கைப் பொலிஸார் குழப்ப முயன்றனர். போரின்போது நிலவிய பட்டினி நிலையைக் குறிக்கும் விதத்தில் வழங்கப்படும் கஞ்சியைத் தயாரித்து வழங்கியமைக்காக நால்வரைக் கைது செய்து ஒருவாரம் தடுத்துவைத்திருந்தனர் என்றும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

காணாமல்போனவர்களின் உறவினர்கள் சிலரும் ஏனையவர்களும் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்வதைத் தடை செய்யும் விதத்தில் அதிகாரிகள் நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்றிருந்தனர் என்றும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

சில இடங்களில் பொலிஸார் தலையிட்டு நிகழ்வுகளைத் தடுத்தனர் அல்லது மக்கள் அங்கு செல்வதைத் தடுத்தனர் என்றும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் புதிய அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கை அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை இலங்கையில் இடம்பெற்றது என்றும், அதன் அளவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், உடனடி நம்பகத்தன்மை மிக்க விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும், பாரிய மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு சர்வதேச தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கோரியுள்ளது.

இலங்கை அரசு ஒரு சுதந்திரமான வழக்குரைஞர் அதிகாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும், பயங்கரவாதத் தடைச் சட்டம் உட்பட துஷ்பிரயோகங்களுக்கு வழிவகுக்கும் அனைத்து சட்டங்களையும் நீக்க வேண்டும் என்றும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் முன்வைத்துள்ள பரிந்துரைகளை வெளிநாட்டு அரசுகள், ஐக்கிய நாடுகள் அமைப்புக்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் கோரியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கடும் வேதனையை - துன்பத்தை ஏற்படுத்தும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வரலாற்றை இலங்கை கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பசுபிக் இயக்குநர் எலைன்பியர்சன், மேலும் இது நாட்டில் மேலும் துஷ்பிரயோகங்கள் நிகழும் ஆபத்தை ஏற்படுத்துகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்துக்கான ஆணையைச் செப்டெம்பர் மாத அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை புதுப்பிப்பது மிகவும் அவசியம் என்று தெரிவித்துள்ள அவர், அந்தக் குற்றங்களுக்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கு உலகெங்கிலும் உள்ள வழக்குரைஞர்கள் இந்த ஆதாரங்களைப் பயன்படுத்துவது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தந்தையும், மகனும்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி...)

இடம்பெற்றுள்ளது.

வெசாக் தன்சல் வழங்குவதற்காக புப்புரஸ்ஸ நகரில் நேற்று முன்தினம் பெருமளவான இளைஞர்கள் திரண்டிருந்தனர். தேவையான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

திடீரென இரவு மின்சாரம் துண்டிக்கப்பட்டதால், மின் பிறப்பாக்கிமூலம் மின்சாரம் பெறப்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 2.30 மணியளவில் தந்தையும் மகனும் மின்பிறப்பாக்கி இருந்த இடத்துக்கு அருகில் உறங்கியுள்ளனர்.

திடீரென மின்பிறப்பாக்கி இயங்காமல் போனதால் இதைப் பார்ப்பதற்கு அங்குள்ள இளைஞர்கள் சென்றுள்ளனர். அவ்வேளையில் உறங்கிக் கொண்டிருந்தவர்களின் முகங்களில் கரப்பான் பூச்சிகள் கடிப்பதைப் பார்த்த இளைஞர் ஒருவர் அவர்களைத் தட்டியெழுப்பியுள்ளனர். ஆனால், அவர்கள் மூச்சுப் பேச்சு அசைவும் இல்லாத நிலையில் காணப்பட்டுள்ளனர்.

பின்னர் இளைஞர்கள் புப்புரஸ்ஸ பன்விலதென்ன கிராமிய வைத்தியசாலைக்கு இருவரையும் கொண்டு சென்றுள்ளனர். எனினும், 40 வயது தந்தையும், 17 வயது மகனும் உயிரிழந்துவிட்டனர்.

சடலங்கள் புப்புரஸ்ஸ பன்விலதென்ன வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளைப் புப்புரஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் புப்புரஸ்ஸ பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த வெசாக் தன்சல் நிறுத்தப்பட்டுள்ளது.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வேளை வந்துள்ளது

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளை நினைவு கூர்வதற்குக் கூட தமிழர்களை அனுமதிக்காமல் அட்டூழியம் பண்ணும் கொழும்பு ஆட்சிப் பீடத்தின் கொடூரப் போக்கு மீண்டும் கண்டனத்திற்கும் கடும் விமர்சனத்துக்கும் உள்ளாகி இருக்கின்றது.

இலங்கை அரசாங்கம் உள்நாட்டுப் போரின் போது தமது படைகள் செய்த அட்டூழியங்களை மறுத்துள்ள நிலையில், அது உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளை வழங்குவதற்குப் பதிலாக பாதிக்கப்பட்டவர்களையும் அவர்களின் சமூகங்களையும் மௌனமாக்க முயற்சிக்கிறது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பணிப்பாளர் எலைன் பியர்சன் கூறியுள்ளார்.

உள்நாட்டுப் போரில் இறந்த அல்லது காணாமலாக்கப்பட்டவர்களை நினைவு கூரும் தமிழர்களை இலங்கை அதிகாரிகள் அச்சுறுத்தித் தடுத்துள்ளனர் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் துஷ்பிரயோகங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கும் சர்வதேச நடவடிக்கைகள் தேவை என்பதையே இந்த சம்பவங்கள் தெளிவாக்குகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு முதல் நாள் - கடந்த மே மாதம் 17ஆம் திகதி - ஐக்கிய நாடுகளின் ஜெனீவா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம், வலிந்து காணாமலாக்கப்பட்ட வழக்குகளைத் தீர்ப்பதற்கு சர்வதேச வழக்குகள் மற்றும் பிற பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுக்கும் அறிக்கையை வெளியிட்டிருந்தது.

இந்நிலையிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கை நேற்று வெளியாகியுள்ளது.

இதே சமயம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வேளையில் இலங்கையில் தங்கியிருந்து, நேரடியாக முள்ளிவாய்க்காலுக்குச் சென்று மக்களுடன் மக்களாகத் தாமும் அந்த நினைவேந்தல்களில் பங்குபற்றிய சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர்நாயகம் அக்னேஸ் கால்மார்ட் அம்மையார், நினைவேந்தலில் ஈடுபடும் மக்களுக்கு எதிரான அச்சுறுத்தல், காணாமலாக்கப்பட்டோர் மற்றும் படுகொலை செய்யப்பட்டோர் தொடர்பாக நீதி, நியாயமான விசாரணைகள் நடைபெறாமை, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்படாமை, குற்றமிழைத்தோருக்குத் தண்டனை விலகளித்தல் தொடருகின்றமை குறித்தெல்லாம் காட்டமாகக் கருத்து வெளியிட்டிருந்தார்.

அந்தப் பின்புலத்திலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பணிப்பாளரின் அறிக்கை இப்போது மீண்டும் இலங்கை அரசின் மனித உரிமை மீறல் போக்கைக் கண்டிக்கும் விதத்தில் வந்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இலங்கை மற்றும் நேபாளத்துக்கான இணைப்பாளர் தோமஸ் பெல் தற்போது இலங்கையில் தங்கி உள்ளார். அவர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பான விடயங்களை அவதானித்துள்ளமையுடன் அது சம்பந்தமாக உரிய தரப்புகளுடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டு வருகிறார். கடந்த வாரம் இலங்கைத் தமிழரசு கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனையும் அவர் கொழும்பில் சந்தித்து இவ்விடயங்கள் தொடர்பில் விரிவாக உரையாடி இருந்தார். அந்தப் பின்னணியிலேயே எதிர்பார்க்கப்பட்ட இந்த அறிக்கை மனித உரிமைகள் கண்காணிப்பகத்தில் இருந்து வந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலின் செப்டெம்பர் அமர்வின்போது, இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் திட்டத்தின் ஆணையை புதுப்பிப்பதும், இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கு சேகரிக்கப்பட்ட ஆதாரங்களைப் பயன்படுத்துவதும் மிகவும் முக்கியமானவை என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்திய பணிப்பாளர் பியர்சன் தமது நேற்றைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளமை கவனிப்புக்குரியதாகின்றது.

இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை மோசமாக இடம்பெற்றுள்ளன, அவை தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து, நீதியையும் பொறுப்புக் கூறலையும் நிலைநாட்ட சர்வதேச நியமங்களுக்கு அமைவான - பக்கச்சார்பற்ற - விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தும் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இதுவரை தான் இவ்விடயம் தொடர்பில் சேகரித்த ஆதாரங்களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டிய வேளை வந்துவிட்டது.

# பங்களாதேஷ் எம்.பி. இந்தியாவில் படுகொலை

இந்தியாவில்சிகிச்சைக்காகஅனுமதிக்கப்பட்டிருந்தபங்களா தேஷின் நாடாளுமன்ற உறுப்பினர் முகமது அன்வருல் அசீம் அன்வர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 12 ஆம் திகதி மருத்துவ சிகிச்சைக்காக கொல் கத்தா சென்ற நிலையில் கடந்த 14ஆம் திகதி முதல் முகமது அன்வருல் அசீம் அன்வரை காணவில்லை என தெரிவிக் கப்பட்டுள்ளது.

எம்.பி.யான அன்வருல் அசீமை தொடர்பு கொள்ள இய லாத நிலையில் காணப்பட்டதையடுத்து கொல்கத்தா பொலி ஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர்.

இந்நிலையில் கொல்கத்தா நியூ டவுன் பகுதியில் அன் வருல் அசீம் நேற்று சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்

பொலிஸார் நடத்திய முதல் கட்ட விசாரணையில் அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.



இத்தகவலை மேற்கு வங்க சிஐடி பொலிஸார் உறுதி செய்துள்ளதுடன் இதுதொடர்பாக படுகொலை வழக்கு பொலி ஸாரால் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

# நாடு கடத்தப்படுவதை ஆட்சேபித்து இந்தியர் தாக்கல் செய்த மனு நிராகரிப்பு



இந்தியாவுக்கு எதிராக செயற்பட்டு வரும் காலிஸ்தானிய தீவிரவாதியான குர்பத்வந்த் சிங் பன்னூனை அமெரிக்க மண்ணில் வைத்து கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டார் என கூறப்படும் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள இந்திய நாட்டவர் தாக்கல் செய்த மனுவை செக் மக்கள் குடியரசின் அரசமைப்பு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ப்ராக் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவளி யான நிகில் குப்தாவின் மனுவே இவ்வாறு நிராகரிக்கப்பட் டுள்ளது.

அமெரிக்க மற்றும் கனேடிய இரட்டைக் குடியுரிமைகளைக் கொண்ட காலிஸ்தானிய பிரிவினைவாதி குர்பத்வந்த் சிங் பன்னுனைக் கொலை செய்தவதற்காக, செயல்பட்டார் என நிகில் குப்தா மீது அமெரிக்க அரச சட்டத்தரணிகளால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் செக் குடியரசில் கைது செய்யப்பட்ட நிக் கில் குப்தாவை அமெரிக்காவிடம் கையளிக்க செக் அரசு நட வடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்கு செக் உள்ளூர் நீதி மன்றம் ஒன்றும் ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது.

இதனை தடுக்கும் வகையிலேயே நிக்கில் குப்தாவின் மனு தாக்கல் செய்யப்பட்டது. எனினும், ஒப்படைப்பு ஏற்கத்தக்கது என்று அறிவிப்பது, நாட்டின் அரசியலமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங் களை மீறுகிறது என்பதற்கான எந்த சூழ்நிலையையும் காணவில்லை என்று செக் அரசியலமைப்பு நீதிமன்றம் தெரிவித்துள்ளது

இந்த தீர்ப்பு காரணமாக நிக்கில் குப்தாவை அமெரிக்கா வுக்கு நாடு கடத்தும் செக் குடியரசின் செயற்பாடுகளுக்கு வழி திறக்கப்பட்டுள்ளது. அதேநேரம் இந்திய அரசாங்கத்தின் இராஜதந்திர முயற்சிகளுக்கு இது பின்னடைவான விடயமாக வும் கருதப்படலாம்.

# இலங்கை மக்கள் மோடியின் மீதே பாரிய நம்பிக்கை வைத்துள்ளனர்

## பா.ஜ.க தமிழக பொதுச்செயலாளர் கருத்து



இலங்கை மக்களுக்கு நாட்டின் ஜனாதிபதி, பிரதமர்களை விடவும் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் மீதே பாரிய நம்பிக்கையும் மரியாதையும் உள்ளது."

– இவ்வாறு பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநில பொதுச்செயலாளர் ராம சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த அவர் தி ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே அமைக் கப்படும் பாலத்தினூடாக முழு இலங்கைக்கும் மறுவாழ்வு கிடைக்கும் எனபாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநில பொதுச்செயலாளர் ராம சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இதனால், பாலம் அமைக்கும் பணியை விரைவுபடுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பாலத்தினூடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் கள் மாத்திரமன்றி, ஒட்டுமொத்த இலங்கைக்கும் மறுவாழ்வு கிடைக்கும் என பாரதிய ஜனதாக் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த திட்டம் காரணமாக இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சி அடைவதுடன், பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும் என அவர் கூறியுள்ளார்.

கடந்த 10 வருடங்களில் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் இலங்கை மக்களுக்கு பல்வேறு பணி களை செய்துள்ளதை நினைவுகூர்ந்த ராம சீனிவாசன், இலங்கை மக்களுக்கு தமது ஜனாதிபதி பிரதமர்களை காட்டிலும் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் மீதே பாரிய நம்பிக்கையும் மரியாதையும் உள்ளதாக தெரிவித்துள்ளார்.



# பல்லாயிரக்கணக்கான மக்களின் கண்ணீருடன் ஈரான் ஜனாதிபதி ரைசியின் உடலம் அடக்கம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி மற்றும் ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹூசைன் அமீர் அப்தெல்லாஹியன் ஆகியோரின் இறுதிச் சடங்குகள் தலைநகர் டெஹ்ரானில் உள்ள புனித நகரமாக மஷாத்தில் நடைபெற்றது.

இந்த இறுதி நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு ஈரானின் ஜனாதிபதியாக பதவியேற்ற கடும்போக்குவாதியான ரைஸியின் இறுதிக் கிரியைகள் அவர் பிறந்த புனித நகரமான மஷாத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

மறைந்த ஈரான் ஜனாதிபதி மற்றும் ஏனையோருக்கு இறுதி அஞ்சலி செலுத்த திரண்டிருந்த அரச தலைவர்களில் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியேவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானியாவில் பொதுத் தேர்தல் முடியும் வரை புகலிடக் கோரிக்கையாளர் வெளியேற்றப்படமாட்டார்



பிரித்தானியாவில் பொதுத் தேர்தல் முடியும் வரை புகலிடக் கோரிக்கையாளர்களை ருவாண்டாவிற்கு அனுப்பும் திட்டம் நிறுத்திவைக்கப்படும் என ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட இருப்பதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த அறிவிப்பு பிரித்தானியாவில் பல முக்கிய விடயங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், பிரித்தானியாவிலிருந்து எப்போது நாடு கடத்தப்படுவோமோ என்ற அச்சத்திலிருக்கும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு ஆறுதலளிக்கும் செய்தியாக இந்த விடயம் அமைந்துள்ளது.

விடயம் என்னவென்றால், தேர்தல் முடிவுகளில் ரிஷி சுனக் பிரதமர் பதவியை இழப்பாரானால், ருவாண்டா திட்டம் செயல்படாமலே போகவும் வாய்ப்புள்ளது.

இதற்கு காரணம், லேபர் கட்சி தேர்தலில் வெற்றி பெறுமானால், ருவாண்டா திட்டமே ரத்து செய்யப்படும் என லேபர் கட்சித் தலைவரான கீர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

# நைஜீரியாவில் துப்பாக்கி சூடு; 40 பேர் பலி, பலர் படுகாயம்



நைஜீரியாவின் வட, மத்திய பகுதியில் ஆயுதமேந்திய குழு ஒன்று நடத்திய துப்பாக்கி சூட்டில் 40 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயம் அடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, துப்பாக்கிச்சூடு நடத்திய ஆயுத கும்பல் அங்கிருந்து தப்பி சென்றதுள்ளது. தகவல் அறிந்து அங்குச் சென்ற பொலிஸார் காயம் அடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும், இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்தக் குழுவும் பொறுப்பேற்கவில்லை எனவும் இந்த பிராந்தியத்தில் நாடோடி மற்றும் கிராம விவசாயிகளுக்கு இடையே நீர், நிலம் தொடர்பாக பிரச்சனை இருந்து வருவதால் இருதரப்புக்கு மோதல் ஏற்பட்டு வன்முறை சம்பவங்களும் நடத்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் இதுபோன்ற தாக்குதல் கடந்த டிசம்பர் மாதம் நடத்தப்பட்டிருந்ததுடன் தாக்குதலில் 140 பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# நோட்டன் மிக்போர்ட் பகுதியிலும் நேற்று மரம் வீழ்ந்ததால் போக்குவரத்துப் பாதிப்பு

(தலவாக்கலை நிருபர்)

ஹட்டன் – லக்ஸபான பிரதான வீதியில் நோட்டன் மிக்போர்ட் பகுதியில் பாரிய மரம் ஒன்று நேற்று சரிந்து வீழ்ந்தமையினால் அவ்வீதியூடான பொதுப் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

மரத்தை வெட்டியகற்றும் பணியில் பிரதேசவாசிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மலையகத்தில் கடந்த சில நாள்களாகத் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பெய்து வரும் கன மழையினால் ஹட்டன் – கொழும்பு மற்றும் ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதிகளில் பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக தங்களது வாகனங்களை செலுத்த வேண்டும் எனப் போக்குவரத்துப் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

அத்துடன் தொடர் மழை காரணமாக பல பிரதேசங்களுக்கு மண் சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதனால் மண் மேடுகளுக்கும் மலைகளுக்கும் அண்மித்து வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை மழையுடன் கடும் காற்றும் வீசுவதனால் மரங்கள் முறிந்து விழும் அபாய நிலையும் காணப்படுவதால் பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் –

அதேவேளை நுவரெலியா – ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா பங்களாவத்தை பகுதி மற்றும் நானுஓயா குறுக்கு வீதியில் பனி மூட்டம் நிறைந்து காணப்படுவதால் அவ்வழியே வாகனங்களை செலுத்தும் சாரதிகள் வாகன மின் விளக்குகளை ஒளிரச் செய்து மிக அவதானமாக பயணிக்குமாறும் – பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஊடகவியலாளர் கபிலநாத்தின் யாத்திரை நூல் வெளியீடு இன்று

(கே.வசந்தன்)

வவுனியாவை சேர்ந்த ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத்தின் யாத்திரை நூல் எதிர்வரும் இன்று வெள்ளிக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட உள்ளது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இன்று மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மனித உரிமை செயற்பாட்டாளரும், தைரியமிக்க பெண்களுக்கான அமெரிக்க அரசாங்கத்தின் விருது பெற்றவருமான சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராசா கலந்து கொள்வதோடு சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.மங்களேஸ்வரன் மற்றும் வீரகேசரியின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, கௌரவ விருந்தினர்களாக வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கனும், ஆய்வாளரும் மூத்த ஊடகவியலாளருமான தமிழ்நிதி அருணா செல்லத்துரையும் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்தை க.அகரனும் வரவேற்புரையை க. அட்சகியும் ஆற்ற உள்ளனர். நிருத்தியார்ப்பன நடனக்கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனமும் இடம் பெற உள்ளது.

இதேவேளை இந்த நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்சன் சிறப்புரை ஆற்ற, நூல் விமர்சனத்தினை தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்சி.வகரன் ஆற்றவுள்ளார்.

நூலில் தமிழர் அரசியல் களம், அரசியலாளர்களின் நிலைப்பாடுகளையும் மக்களின் நிலைப்பாடுகளையும் உள்ளடக்கிய அரசியல் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இது நூலாசிரியரின் இரண்டாவது நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பெருந்தோட்ட பகுதிகளில் உணவுப் பாதுகாப்பின்மை

## உலக உணவுத் திட்டம் அறிக்கை

இலங்கையின் பெருந்தோட்ட பகுதிகளில் உணவுப் பாதுகாப்பின்மை அதிகரித்துள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் இலங்கையில் அதிக உணவு பாதுகாப்பின்மை வீதம் பெருந்தோட்ட பகுதிகளில் பதிவாகியுள்ளதாக உலக உணவுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது.

உலக உணவுத் திட்டம் தனது 2023 ஆண்டுக்கான வீட்டு உணவுப் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை மாதிரிக் குடும்பங்களின் அடிப்படையில் வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டில் 24 வீத குடும்பங்கள் மட்டளவில் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டிருந்தன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதம் மார்ச் மாதத்தில் 17 வீதமாக காணப்பட்டதுடன், ஓகஸ்ட் – செப்டம்பர் வரையான காலப்பகுதியில் 24 வீதம் வரை அதிகரித்துள்ளது.

ஆண் தலைமைத்துவ குடும்பங்களில் 23 வீதமாகவும் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் 32 வீதமாகவும் உணவு பாதுகாப்பின்மை காணப்படுவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

26 வீத குடும்பங்களில் போதுமானளவு உணவு எடுத்துக்கொள்ளப்படுவதில்லை எனவும் உலக உணவுத் திட்டம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குடும்பமொன்று அதன் மொத்த செலவில் 62 வீதத்திற்கும் மேல் உணவுக்காக செலவிடுவதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 24.05.2024




உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். அமைதியுடனும் பொறுமை யுடனும் இருக்க வேண்டும். எதிர்காலத் துக்குத் திட்டமிடுங்கள்.

பணியில் அதிகப்படியான சுமைகள் காணப்படும். உங்கள் பணிகளை முறையாக முடிக்க சில சௌகரியங்களை இழக்க நேரும்.

பணியிடத்தில் காணப்படும் பதற்றத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்து வீர்கள். இதனால் இருவரி டையே வாக்குவாதம் ஏற்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். தேவை யற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தூக்கமின்மை காரணமாக முதுகு வலி ஏற்பட்டு அதனால் கவலை உண்டாகலாம்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி அடை வீர்கள். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்கள் பணி களை செவ்வனே ஆற்றுவீர்கள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்களுள் இருக்கும் திறமை காரணமாக நீங்கள் திறம்பட செயலாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உறவில் ஒற்றுமை வலுப் படும்.

பண வரவு அதிகமாக காணப்படும். எதிர்பாராத வரவு ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் காணப்படாது. கண்டிப்பான உணவு முறை மற்றும் ஒழுக்கம் உங்கள் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்க உதவும்.




இன்று உங்களிடம் நம்பிக்கைப் போக்கு காணப்படும். உங்கள் முயற்சி மூலம் கிடைக்கும் வெற்றி உங்கள் மன உறுதியை அதிகரிக்கும்.

நீங்கள் பணிகளை எளிதாக முடிப் பீர்கள். புதிய வாய்ப்புகள் மூலம் உங்கள் திறமையை நீங்கள் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர் கள். நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சேமிப்பு மூலம் நிதிநிலைமை உயரும்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் எண்ணெய் உணவுகள் காரணமாக தோல் பிரச்சினைகள் காணப்படும்.




இன்று பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். இருப்பதைக் கொண்டு மகிழ்ச்சி அடையுங்கள். இதனால் திருப்தி நிலவும்.

பணியிடத்தில் அமைதியற்ற சூழல் காணப்படும். சக பணியாளர்களுடனான உறவில் சில சிக்கல்கள் இருக்கும்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணை யுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இதனை தவிர்ப்பது நல்லது.

இன்று தேவையற்ற செலவுகள் மற்றும் அதனைக் கையாள்வதில் கடினமான சூழல் காணப்படும். இழப்பைத் தவிர்க்க முறையாக திட்டமிட வேண்டும்.

தலைவலி போன்ற சிறு உபாதைகள் காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாகத் தேவையற்ற மன உளைச்சல் காணப்படும்.




இன்று சில சிக்கல்கள் காணப்படும் என்பதால் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். வாக்கு வாதம் மற்றும் வதந்திகளில் ஈடுபட வேண்டாம்.

பணியிடச் சூழல் சிறிது கடினமாக காணப்படும். கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண் பிப்பீர்கள். உறவு நல்லுறவாக இருக்கவும் உறவில் மகிழ்ச்சி பராமரிக்கவும் இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று பண இழப்பு ஏற்படும். நிதி சம்பந்தமான முக்கியமான முடிவுகளை இன்று தவிர்ப்பது சிறந் தது.

தேக ஆரோக்கியம் அவ்வளவு சிறப்பாக இருக்காது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று இலக்குகளை அடைவதற்கு உகந்த நாள். இன்று எதிர்பாராத நன்மைகள் நேரலாம்.

நீங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரைவாக முடிப்பீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் மனதில் பொங்கும் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள்.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர் கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக காணப் படும்.




உங்களின் முக்கியமான செயல்களை இன்று முடிக்க இயலாது. உங்கள் செயல்களை முன்கூட்டியே திட்டமிட் டால் வெற்றி அடையலாம்.

நீங்கள் பணியில் ஆழ்ந்து ஈடுபட் டிருப்பீர்கள். பணிகளை மேற்கொள் ளும்போது சில சவால்களை சந்திக்க நேரும். சூழ் நிலைக் கேற்றவாறு வாழ வேண்டியது அவசியம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சண்டை ஏற்படும். இதனால் உங்கள் துணை கவலை அடைய நேரும்.

இன்று பண வரவு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவில் இருக்காது. நிதிநிலையில் ஸ்திரத் தன்மை காண்பதில் சில தடைகளை எதிர்கொள்ள நேரும்.




இன்று பிரார்த்தனை மற்றும் தியா னம் ஆறுதலை அளிக்கும். எந்த விஷ யத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். பொழுதுபோக்கு நடவ டிக்கைகள் மூலம் மகிழ்ச்சி காணலாம்.

நீங்கள் இன்று பணிகளை திட்ட மிட்டபடி முடிக்க வேண்டும். மூத்தோர்களின் ஆலோசனை வழி காட்டும்.

உங்கள் விருப்பமின்றி வீட்டில் நடைபெறவிருக்கும் சுபநிகழ்ச்சி பற்றிய அதிருப்தி காணப்படும். உங்கள துணையிடம் கோபமாக நடந்து கொள்வீர்கள்.

இன்று வரவு செலவு இரண்டும் சேர்ந்து காணப்படும். உங்கள் குடும்பத்துக்காக அதிகமாக செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அஜீரணக் கோளாறு மற்றும் அசௌகரியம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.05.2024



தனுசு

இன்று நிச்சயமற்ற தன்மையை உணர்வீர்கள். உங்கள் முயற்சிகளுக் கான பலனில் நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். அமைதியாக இருக்க வேண்டும்.

பணியில் கவனம் குறைந்து காணப்படும். எனவே கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் இன்று சகஜமாகவும் உங்கள் துணையின் விருப்பப்படியும் நடந்து கொள்ள வேண்டியது அவசி யம்.

இன்று செலவினங்கள் அதிகமாக காணப்படும். எதிர்கால நலன் கருதி நீங்கள் பணத்தை சேமிக்க வேண்டும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்களை மிகவும் அலட்டிக் கொள்ளாதீர்கள். பிரார்த்தனை மூலம் மன அமைதி பெறலாம்.



கும்பம்

உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செய லாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதி காரிகளின் பாராட்டுக் கிடைக்கும். பணிகளை உற் சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும்.



மகரம்

இன்று அனைத்தும் சுமூகமாக நாடாகும். நம்பிக்கை உணர்வு உங்களை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லும்.

நீங்கள் இன்று பணியில் சிறந்து விளங்குவீர்கள். உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள். அதே சமயத்தில் உங்களுள் இருக்கும் ஆற்றலைக் கண்டறிய முடியும்.

இன்று உங்கள் போக்கில் துணையின் மீது அன்பும் அக்கறையும் காணப்படும். நண்பரின் இல்ல திருமண விழாவிற்கு செல்வதன் மூலம் இருவரும் நெருக்கமாக காணப்படுவீர்கள்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். நிதி நிலைமை சுதந்திரமாக இருக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



மீனம்

ஆன்மீக ஈடுபாடு வெற்றியை அளிக் கும். உங்களிடம் உறுதியும் காணப்படும்.

வேலை தொடர்பான பயணம் காணப் படும். இறுக்கமான பணிகள் மற்றும் பணிச்சுமைகள் காரணமாக பணியில் தவறுகள் நேரலாம்.

நீங்கள் இன்று உணர்ச்சிவசப்பட்ட மன நிலையில் இருப்பீர்கள். சிறிய விஷயங்களைக் கூட தீவிரமாக எடுத் துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதி கரிக்கும் பொறுப்புகள் காரணமாக நீங்கள் அதிகமாக செலவு செய்ய நேரும்.

கண் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை.









# நாடு முழுவதிலும் மூன்று நாள்களுக்குள் 49,000 மின் விநியோகத் தடைகள் பதிவு

நாடு முழுவதிலும் மூன்று நாள் களுக்குள் 49 ஆயிரத்து 60 மின் விநியோகத் தடைகள் பதிவாகியுள் ளன என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரி வித்துள்ளார்.

இதனால், ஒரு லட்சத்து 77 ஆயி ரத்துக்கும் அதிகமான மின் பாவனை யாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் எக்ஸ் தளத்தில் பதிவிட் டுள்ளார்.

மின் விநியோகத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக் கைகளுக்காக மேலதிக ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சர் கஞ்சன விஜே சேகர குறிப்பிட்டுள்ளார்.

மின் விநியோக துண்டிப்பு தொடர் பில் 1987 எனும் இலங்கை மின்சார சபையின் அவசர தொலைபேசி இலக் கத்திற்கு அறிவிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




# நாடு முழுவதும் வேலைநிறுத்தப் போராட்டம் சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பு முஸ்தீபு

எதிர்வரும் 28 ஆம் திகதி நாடளா விய ரீதியிலுள்ள அனைத்து வைத் தியசாலைகளிலும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

உத்தியோகபூர்வ சீருடை கொடுப் பனவிற்கு இணையாக ஏனையவற் றுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப் பனவை அதிகரிப்பது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்படவில்லை எனவும் விசேட கொடுப்பனவை அதிக ரிப்பதற்கான சுற்றறிக்கை, 15 பிரி வினரை விடுத்து வெளியிடப்பட்டுள் ளதாகவும் சுகாதார தொழிற்சங்க கூட்ட மைப்பின் இணை ஏற்பாட்டாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள் ளார்.

தாதியர்கள் உள்ளிட்ட சுகாதார துறையின் 72 தொழிற்சங்கங்கள் கடந்த நாள்களில் மாகாண மட்டத்தில் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத் திருந்தன.

பொருளாதார நீதியை வழங்கு வதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக் கைகளுக்கு சுகாதார அமைச்சு தீர்வை வழங்குவதாகக் கூறியபோதிலும், அதனை நிறைவேற்றாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சுகாதார தொழிற் துறையைச் சேர்ந்த 72 தொழிற் சங்கங்கள் இணைந்து இந்தப் பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுத்தன.



# சகல தீவுப் பகுதிகளுக்குமான படகுச் சேவைகள் இன்று ரத்து

## நயினாதீவிற்கான மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட சேவை

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணத்தில் இருந்து கடல் கடந்து பயணிக்கும் தீவுப் பகுதிகளுக்கான படகுச் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் காலநிலை அறிக்கையின் பிரகாரம் இன்று 24 ஆம் திகதி கடல் அதிக கொந்தழிப்பாக இருக்குமென எதிர்வு கூறப்படுவதன் காரணமாக பொதுமக்கள் பாதுகாபு கருதியே தீவுப் பகுதிகளிற்கான படகுச் சேவைகள் இரத்துச் செய்யப்படுகின்றன என யாழ்ப்பாணம் அனர்த்த முகாமைத் துவப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் நெடுந்தீவு, எழுவைதீவு மற்றும் அனலைதீவுகளிற்கான படகுச் சேவைகளே இடம்பெற மாட்டா எனவும் தெரிவிக்கப்பட்டுளது.

இதே நேரம் நயினாதீவிற்கான படகுசேவைகள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மலேசியாவிற்குச் சென்ற இலங்கையர் 1,608 பேர் மீண்டும் நாடு திரும்பினர்



சட்டவிரோதமாக மலேசியாவிற்குச் சென்ற 1,608 இலங்கையர்கள் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையிலான 2 மாத காலப்பகுதியில் மேற்படி 1,608 பேரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மலேசிய அரசாங்கத்தின் புலம்பெயர்ந்தோரைத் திருப்பி அனுப்பும் திட்டத்திற்கு அமைய இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கடற்றொழில் நடவடிக்கைகளுக்கான கொரிய பரீட்சைப் பெறுபேறு வெளியீடு

உற்பத்தி மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகளுக்காக கொரிய மொழியில் நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இந்த பரீட்சைக்கு 3 ஆயிரத்து 580 பரீட்சாத்திகள் தோற்றியிருந்தனர்.

அவர்களில் 3 ஆயிரத்து 422 விண்ணப்பதாரர்கள் சித்தியடைந்துள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனை இந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான நேர்முகப்பரீட்சை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மாகாண அலுவலகங்கள், மற்றும் பயிற்சி நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

இதற்கான நேர்முகத்தேர்வுகள் எதிர்வரும் ஜூன் மாதம் 6, 7 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# உலகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தேரவாத பௌத்தத்தில் தீர்வு இருக்கின்றது

## 2024 அரச வெசாக் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

“விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்துடன் வேகமாக முன்னேறும் உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தேரவாத பௌத்தத்தில் தீர்வு இருக்கின்றது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதனால் தேரவாத பௌத்தத்தின் உண்மையான நோக்கம் பாதுகாக்கப்பட்டு உலகிற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

மாத்தளை தர்மராஜா பிரிவேனா விகாரையில் நேற்று முற்பகல் நடைபெற்ற அரச வெசாக் விழாவில் இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“மாத்தளை வரலாற்றுச் சிறப்புமிக்க அலுவிகாரையில் திரிபீடகம் பிரதிஷ்டை செய்யப்பட்டதன் காரணமாகவே புனித பௌத்த மதம் பாதுகாக்கப்பட்டது. தேரவாத பௌத்தத்தின் முக்கிய இடமாக விளங்கிய மாத்தளை மாவட்டத்தை மையமாகக் கொண்டு இவ்வருடம் அரச வெசாக் பண்டிகையை கொண்டாடும் வாய்ப்பு கிடைத்தமை மகிழ்ச்சி.

அநுராதபுர யுகத்தில் இருந்த பிரிவேனாக்களில் இருந்து மகா சங்கத்தினர் மட்டும் உருவாகவில்லை. உலகின் முக்கியமான நீர்ப்பாசன முறையை இலங்கையில் ஆரம்பிக்கும் வாய்ப்பு அந்தக் கல்வி முறையினால் கிடைத்ததாக செனரத் பரணவிதான போன்ற அறிஞர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இன்று உலகம் மூடநம்பிக்கையிலிருந்து விலகிச் செல்கிறது. அறிவியலில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பத்தால், பல நூற்றாண்டுகளாக நமது வாழ்க்கை முறை முற்றிலும் மாறி வருகிறது. குறிப்பாக மருத்துவத் துறையும் தொழில்நுட்பத் துறையும் வளர்ச்சியடைந்துள்ளன. அதேநேரம், வானவியல் பற்றிய புதிய அறிவு மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் பெறப்பட்ட அறிவின் வளர்ச்சியுடன், நாம் இன்னும் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால் தேரவாத பௌத்தத்தைப் பின்பற்றுபவர்களுக்கும் அதன் உண்மையான அர்த்தத்தை அறிந்தவர்களுக்கும் இது ஒரு பிரச்சினையல்ல. தேரவாத பௌத்தத்தின் ஊடாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். எனவே, தேரவாத பௌத்தத்தின் உண்மையான நோக்கத்தைப் பாதுகாப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.”– என்றார்.

இந்த நிகழ்வில், புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, இராஜாங்க அமைச்சர்களான பிரமித பண்டார தென்னகோன், ரோஹன திஸாநாயக்க, மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு. கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாலக கோட்டேகொட, உதயன கிரிதிகொட, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.











